பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 07 2024 **FRIDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வங்காளவிரிகுடா நாடுகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. 1975-ல் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புகளை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 25-ஆம் தேதி **Samvidhaan Hatya Diwas** கடைபிடிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. நாட்டில் உள்ள துறைமுகங்களை உலகத்தரத்திற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

4. பொருளாதார வளர்ச்சியில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

5. விம்பிள்டன் டென்னிஸ் அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான **Carlos Alcaraz** - டேனியல் மெத்வதே-வை எதிர்கொள்கிறார்.

-இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>

வங்காளவிரிகுடா மண்டல பொருளாதார ஒத்துழைப்பு நாடுகள் மண்டலத்தில், அமைதி, வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வங்காள விரிகுடா மண்டல நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இடையே இன்று புதுதில்லியில் உரையாற்றிய பிரதமர், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்வதில் பிம்ஸ்டெக் நாடுகளின் பங்கு மகத்தானது என்று கூறினார்.

உறுப்பு நாடுகளுக்கு இடையே போக்குவரத்து கட்டமைப்பை விரிவுபடுத்துவது, எரிசக்தி, வர்த்தகம், சுகாதாரம், வேளாண்மை, அறிவியல், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளிலும் மக்களுக்கு இடையிலான கலாச்சார பண்பாட்டு தொடர்புகளை மேம்படுத்துவது உள்ளிட்ட விஷயங்கள் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர்களிடம் பிரதமர் ஆலோசனை நடத்தினார்.

இந்தியாவில் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை மற்றும் கிழக்கத்திய கொள்கை போன்றவை வங்காளவிரிகுடா நாடுகளின் ஒத்துழைப்புக்கு வலுசேர்க்கும் வகையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

கடல்மார்க்கமாக நாடுகளை ஒன்றிணைக்கும் சாகர் தொலைநோக்குத்திட்டம் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வரும் செப்டமர் மாதம் தாய்லாந்தில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி, உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களிடம் உறுதியளித்தார்.

<<<<<<<>>>>>>

1975-ஆம் ஆண்டு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டதால் நாட்டின் ஜனநாயகத்திற்கும், அரசியல் சாசனத்திற்கும் ஏற்பட்ட பாதிப்புகளை நினைவுகூறும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 25-ஆம் தேதி **Samvidhaan Hatya Diwas** கடைபிடிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில் ஜனநாயகத்தை காக்க லட்சக்கணக்கானோர் பட்ட இன்னல்களை நினைவுகூறும் வகையில் மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் இந்நாளை கடைபிடிக்க முடிவு செய்ததாக தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தனிமனிதனின் சுதந்திர உணர்வையும், நாட்டின் ஜனநாயகத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று திரு அமித் ஷா தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், **Samvidhaan Hatya Diwas** நாட்டின் அரசியல் சாசனத்திற்கு ஏற்பட்ட பாதிப்பை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளதாக கூறியுள்ளார்.

காங்கிரஸ் அரசு கொண்டுவந்த அவசரநிலை பிரகடனத்தால் பாதிக்கப்பட்டவர்களின் இன்னல்களை நினைவுபடுத்தும் நாளாகவும் இது அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

கடல்சார் துறையின் வளர்ச்சிக்கு முக்கிய மைல்கல்லாக கேரள மாநிலத்தின் விழிஞ்ஞும் துறைமுகம் விளங்குகிறது என்று மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தையடுத்த விழிஞ்ஞும் துறைமுகத்திற்கு முதல் முதலாக வந்துள்ள சான் ஃபெர்னான்டோ சரக்கு கப்பல் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டில் உள்ள துறைமுகங்களை

உலகத்தரத்திற்கு உயர்த்துவதற்கான தொலைநோக்கு பார்வையுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன், விழிஞ்ஞும் துறைமுகம் மேலும் பல வசதிகளுடன் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

துறைமுகங்கள் பொருளாதா வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்ட அவர், கேரளாவின் வளர்ச்சியில் விழிஞ்ஞும் துறைமுகத்தின் பங்கு மகத்தானது என்று கூறினார்.

மாநிலத்தில் முக்கிய பொருளாதார கட்டமைப்பாக இந்த துறைமுகம் விளங்குவதாக திரு பினராயி விஜயன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மகாராஷ்ட்ரா மாநிலத்தில் 29 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

நாளை மாலை மும்பை செல்லும் அவர், தானே போரிவலி இரட்டை சுரங்கப்பாதை திட்டம், நவி மும்பையில் பன்னோக்கு சரக்கு மையம், லோகமானிய திலக் ரயில் நிலையத்தில், புதிய நடைமேடைகள் சத்ரபதி சிவாஜி முனையத்தில் புதிய நடைமேடைகள் மற்றும் விரிவாக்கப்பணிகளையும் பிரதமர் தொடங்கிவைக்க உள்ளார்.

<<<<<<<>>>>>>

அரசின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் இளைஞர்களுக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் உள்ள நிர்வாகவியல் கல்லூரி ஒன்றில் “வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் உயர்கல்வி நிறுவனங்களின் பங்கு” என்ற தலைப்பில் உரையாற்றிய அவர், நாட்டில் வெளிப்படையான மற்றும் பொறுப்புமிக்க நிர்வாக கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசு நிர்வாகம் சிறப்பாக செயல்படுவதால் வியத்தகு பொருளாதார வளர்ச்சியை நாடு அடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உள்ளது என உலக வங்கி பாராட்டியுள்ளதை தெரிவித்த அவர், சர்வதேச செலாவணி நிதியம் நாட்டின் மின்னணு சட்டமைப்பு உலகிற்கு முன்மாதிரியாக உள்ளது என்று கூறியதையும் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க உயர்கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறினார்.

தொழில்நுட்பம், மின்னணு கட்டமைப்புக்கான மாற்றம், நீடித்த பொருளாதார வளர்ச்சி, மருத்துவம், வேளாண்மை, உணவு பாதுகாப்பு, திறன்மேம்பாடு, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் உள்ளிட்டவை நாட்டை வளர்ச்சிப்பாதையில் பயணிக்க வைத்திருப்பதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநிலங்களுக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், குவஹாத்தி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி தொடர்பான பிரதமரின் தொலைநோக்கு பார்வையை செயல்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான ஒதுக்கீடு 24 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து, 82 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநிலங்களில் உள்கட்டமைப்பு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, புத்தாக்க தொழில்கள், சுற்றுலா வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க தொலைநோக்குத் திட்டத்தில், வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் அடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து இன்று குவஹாத்தியில் மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா ஆய்வு மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

மத்திய மீன்வளத்துறை சார்பில் கோடைகால மீனவர் சந்திப்பு மாநாடு இன்று மதுரையில் நடைபெற்றது.

இதனையொட்டி, மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும் கண்காட்சியை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் திறந்துவைத்தார்.

இத்துறைக்கான இணையமைச்சர்கள், திரு எஸ் பி சிங் பாஹல், திரு ஜார்ஜ் குரியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உத்தரப்பிரதேசம், பீகார், அஸ்ஸாம், மேகாலயா, அருணாச்சலப்பிரதேசம், ஒடிஷா ஆகிய மாநிலங்களின் மீன்வளத்துறை அமைச்சர்களும் இம்மாநாட்டில் பங்குபெற்றனர்.

மீன்வளத்துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்களை விளக்கும் காணொலி காட்சியும் திரையிடப்பட்டது.

பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் குறித்த விழிப்புணர்வு படக்காட்சியும் திரையிடப்பட்டது.

மீன்களை பதப்படுத்துவது, பாதுகாப்பாக சந்தைகளுக்கு எடுத்துச்செல்வது, மீன்வள வளாகங்களை விரிவுபடுத்துவது, டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மீன் விற்பனையை மேம்படுத்துவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

காலை எட்டு மணிமுதல் வாக்கு எண்ணும் பணி நடைபெறவுள்ளது.

முதலில் அஞ்சல் வாக்கு எண்ணிக்கையும், அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படவுள்ளன.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்தி*

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான **Carlos Alcaraz –** டேனியல் மெத்வதே-வை எதிர்கொள்கிறார்.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் நோவாக் ஜோக்கோவிச்சும் - **Lorenzo Musetti –**யும் விளையாடுகின்றனர்.

<<<<<<<END>>>>>>